**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவையாறு</u>**

முன்னிலை: திரு. ப.இரமேஷ், பி.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவையாறு

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ஆம் தேதி புதன்கிழமை

**<u>அ.வ.எண். 128/2018</u>**

**<u>CNR.No. TNTJ15-000152-2018</u>**

1.அஞ்சம்மாள்
2.கல்யாணி ...வாதிகள்

–எதிரி–

1,பசுபதி
2.மனோ என்ற மனோகர்
3.பத்மினி
4.மோகன் ........ பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பு 05.08.2026 இன்று விசாரணைக்காக வந்ததில் வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. V.K.தங்கரத்தினம் அவர்களும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.A.புனிதன் அவர்களும் ஆஜராகியும், வழக்கானது விசாரணைக்காக நிலுவையில் இருந்தபோது வாதிகள் ஆஜராகாத காரணத்தால் இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்துவந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

<u>தீர்ப்புரை</u>

தாவா சொத்தின் தென்புறம் பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ எந்தவிதமான இடையூறும் ஆக்கிரமிப்பும் எந்த விதமான கட்டுமானமும் கட்டாமல் இருக்க ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கின் செலவுத்தொகை கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கு இன்று வாதி ஆஜராவதற்கும் குறுக்கு விசாரணை செய்வதற்கும் பட்டியலிடப்பட்டது. ஆனால் சாட்சியோ அல்லது வாதியின் வழக்கறிஞரோ ஆஜராகவில்லை. ஆவணங்களைப் பரிசீலித்ததில், கடந்த 7 விசாரணைகளின்போதும் வாதி ஆஜராகவில்லை. மீண்டும் மதியம் 12.30 மணிக்கு வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோதும் வாதி ஆஜராகவில்லை எவ்விதப் பிரதிநிதித்துவமும் இல்லை எந்தவொரு முன்னேற்றமும் இல்லாமல் இந்த வழக்கை நீண்ட காலம் வைத்திருப்பதில் பயனில்லை. இந்த வழக்கை தள்ளுபடி செய்வதைத் தவிர இந்த நீதிமன்றத்திற்கு வேறு வழியில்லை. எனவே வாதியின் வருகையின்மை காரணமாக வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை

2026 –ஆம் ஆகஸ்ட் திங்கள் 05ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/–** திரு. ப.இரமேஷ், பி.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவையாறு.